**போபே போத்தல பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து போபே போத்தல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 2,571,438 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது ரூபா 73,678 தொகைக்கான பெற்ற கழிவு கணக்கீடு செய்திருக்க வில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கழிவுத் தொகை சரியாக உறுதிப்படுத்திய பின்னர் கணக்கீடு செய்வேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 5,133,667 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்டகாலமாக காணப்பட்ட சமமின்மைகள் என்பதால் எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டு முதல் காணப்பட்ட ரூபா 761,993 தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்டு கணக்கு களை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 06 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலவீச்சில் அறவிடப் படாமல் காணப்படும் ரூபா 881,780 தொகைக்கான 04 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) மஹ ஹபுகல மாட்டிறைச்சிக் கடை 2002 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டு இருந்ததுடன், அக் கடையில் இருந்து பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 979,477 தொகையாக காணப்பட்டது. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | | |
| (i) விதி 59 | -- | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப் பட்டு கைத்தொழில் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்து இருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 143 | - | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் சமப்படுத்தப் பட்டு பிரதான பேரேட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | -- | கடைகள் வாடகைக்கு கொடுப்பது தொடர்பான அனைத்து உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியதுடன், கலேகான சந்தையில் 17 கடைகளின் உடன்படிக்கைகள் 2013 ஆண்டின் பின்னர் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,291,212 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,757,820 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 13,969,000 | 13,678,198 | 10,659,167 | 41,858,398 | 15,300,000 | 14,078,528 | 11,582,072 | 36,473,743 |
| வாடகை | 4,987,000 | 5,099,370 | 4,936,452 | 2,890,264 | 3,800,000 | 4,972,324 | 5,171,061 | 2,731,867 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 335,100 | 537,888 | 519,951 | 24,225 | 402,000 | 592,276 | 630,276 | 4,750 |
| ஏனைய வருமானங்கள் | 7,282,000 | 6,838,194 | 6,821,475 | 63,305 | 8,203,300 | 5,230,300 | 5,160,196 | 58,890 |
| | 26,573,100 | 26,153,650 | 22,937,045 | 44,836,192 | 27,705,000 | 24,778,628 | 22,543,605 | 39,269,250 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 26,573,100 தொகையாக இருந்ததுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 26,153,650 தொகையாகும். ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டு மொத்த வருமானம் ரூபா 65,422,900 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 22,937,045 தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தல் 35 சதவீதமாகக் காணப்பட்டது | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருமானம் சேகரித்தல் 18 சதவீதமாக காணப்பட்டமையால் வரி அறவீடு செய்தல் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. ஆதனங்களை தடைசெய்து நிலுவையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை இந்த நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வாடகை வருமானம் ரூபா 7,831,237 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,936,452 தொகையாக காணப்பட்டமையால் வாடகை வருமானம் சேகரிப்பு 63 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,174,293 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 167,885,277 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகை அனுப்புமாறு கடிதம் அனுப்பியுள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## (ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்பெறாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) கிதுலம்பிடிய எகொடவத்த கல்கெடிய வத்த பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 442,378 தொகை கொடுப்பனவு செய்திருந்த போதிலும் பாதையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மதகின் பக்கச்சுவர் கற்கள் கழன்று இருந்ததால் பாதையில் செல்வது ஆபத்தான நிலைமை ஒன்று காணப்பட்டது. | நிர்மாண வேலை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். | நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டு நீண்டகாலம் கழிந்துள்ளதால் பாதை கீழிறங்கி உள்ளது. |
| (ii) மவுன்ட் பிளஸன்ட் தோட்டத்தின் பிரதான பாதையினை பக்க வடிகாலை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,973,514 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பாதையின் 04 இடங்களில் பாதைக்கு கிடையாக வெடிப்படைந்து இருந்ததால், வடிகால் முறைமை பாதையை விட உயரமாக காணப்பட்டதால் நீர்வடிந்தோட முடியாமல் பாதைக்கு மேற்பகுதியில் நீர்சேகரமாகி காணப்பட்டது. | நிர்மாண வேலை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். | மூடிகளின் தகடுகள் கனமாக இருந்ததால் பாதையை விட உயரமாக காணப்பட்டது. |

## (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | சபையினால் வேண்டும். | |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 ஊழியர் வகையைச் சேர்ந்த 07 ஊழியர்களின் வெற்றிடங்கள் மற்றும் 07 ஊழியர்களின் மிகைகள் காணப்பட்டன. | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கும், மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவிகளை முறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையினால் அமைய, தற்காலிக, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையின் மீது சேர்த்தப்பட்ட ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 3,360,672 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப் பட்டிருந்தது. | பிரதியீட்டு ஊழியர் களை முறைப்படுத்த வேண்டும். | தற்போது இருக்கும் தொழிலாளர்கள் போதாமையால் ஆட்சேர்க்கப்பட்டு சபை நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்தப்பட்டது. |
| (இ) | சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற, இறந்த மற்றும் தற்போது கடமை நிலையத்தை இனங்காண முடியாமை காரணங்களினால் 08 ஊழியர்களிடம் 10 வருடங்களை மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 213,889 கடன் மீதி மற்றும் கடந்த ஆண்டு வேலை இடைநிறுத்தப்பட்ட மின்சார தொழிநுட்பவியலாளரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 100,122 இற்கான கடன் மீதியொன்றினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிணையாளர்களிடம் இருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1999 ஆண்டில் வாடகைக்கு கொடுத்திருந்த லபுதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தின் 32 கடைகளின் உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக ரூபா 269,115 தொகையான கடை வாடகை மற்றும் ரூபா 30,260 கடை வாடகை தண்டப்பணம் அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | வாடகை உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்கி நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | உடன்படிக்கைகளை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கலேகான சந்தை கடை அறைகள் தொடர்பாக மீளாய்வாண்டு செப்தெம்பர் 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 11 கடைகள் உரிய முறையில் பராமரிக்கப்படாமலும், உட்கட்டமைப்பு வசதிகளும் இன்மையின் காரணமாக மூடப்பட்டிருந்தது. இந்தக் கடைகளை திருத்தங்கள் மேற்கொண்டு புதிய உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் சபையின் வாடகை வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடை வாடகை செலுத்தப்படாத கடை உரிமையாளர்களின் கடை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தொலைத்தொடர்பு செலுத்துகை கோபுரங்கள் 05 காணப்பட்டதுடன், 2014 திசெம்பர் 30 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி இந்த கோபுரங்களுக்கான கட்டணங்கள் அறவிடப்படாமையால் ரூபா 15,000 இற்கான நட்டம் ஒன்று சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ளது. | தொலைபேசி செலுத்துகை கோபுரங்களில் இருந்து வருடாந்த வாடகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மற்றும் சபை நிதியத்தை பயன்படுத்தி ரூபா 4,050,000 இற்காக கொள்வனவு செய்திருந்த பெக்கோ இயந்திரம் ஒரு வருடத்தை மிகையான | பராமரிப்பு அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |

காலம் முதல் சபை வளவில் ஓட்டப்படாமல் நிறுத்தப் பட்டு இருந்தமையால் மீளாய்வாண்டு செப்தெம்பர் 18 ஆந் திகதி திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டிருந்த போதும் 2019 மார்ச் 25 திகதி வரை திருத்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சில் இருந்து வழங்கியிருந்த நீர்பவுசர் மற்றும் கம்பெக்டர் மற்றும் பிரதான அமைச்சில் இருந்து வழங்கியிருந்த டிரக்டர் ஆகியவற்றின் உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | உரிமையை சபைக்கு உரித்தாக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பிரதேச சபை யினால் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பேன். |

**3.5.2 வழங்கல்களும் சேவைகளும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவைகளை இனங்காணாமல் மற்றும் பெறுகை செயற்பாட்டினை கடை பிடிக்காமல் ரூபா 279,000 தொகை செலவிடப்பட்டு 25 அலுவலக கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. | அரச பெறுகை செயற்பாட்டின் படி கூறுவிலைகள் அழைக்கப்பட்டு விவரக் குறிப்புகளில் சரியான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மதிப்பாய்வுக் குழுவினால் கூறுவிலைகளை ஒப்பீடு செய்து மற்றும் கட்டளை இட்ட பின்னர் வழங்கள் தொடர்பான விடயங்களை பகுப்பாய்வு செய்து கொள்வனவு மேற்கொண்டேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடயம் ஒன்றில் ரூபா 360,000 இற்கான மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நூற்றுக்கு 100 வீதம் சேமிக்கப் பட்டிருந்து | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 04 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 30,192,729 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 30 சதவீதம் முதல் 63 சதவீத வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | செலவு விடயமொன்றின் மதிப்பீட்டு ஏற்பாடுகளின் வரையறையை மிகைத்து ரூபா 257,708 தொகை அதாவது 525 சதவீதம் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஈ) | ஒரு வருமான விடயத்தில் பிரதிகூலமான முரண் ரூபா 1,277,419 தொகை அதாவது 55 சதவீதம் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வினவி இருக்காததுடன் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |